(ஆ) சுதந்திரப் போராட்ட வீரர்களின் நிலங்களுக்கு குத்தகைச் சட்டத்திலிருந்து விலக்கு :

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட கோவில் மற்றும் மானிய நிலங்களுக்குக் குத்தகைச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்படாமையால் தியாகிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அரசு தியாகி ஓய்வூதியம் மற்றும் பல்வேறு சலுகைகள் அளித்துள்ள நிலையில் குத்தகைச் சட்டங்களிலிருந்தும் விலக்கு அளிக்கத் தேவையில்லை. மேலும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் வைத்துள்ள மானிய நிலங்களுக்குக் குத்தகைச் சட்டத்திலிருந்து விலக்கு அளித்தால் எந்த காரணத்திற்காக மானியம் அளிக்கப்பட்டதோ அது நிறைவேறாமல் போய்விடக்கூடும். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குக் குத்தகைச் சட்டத்திலிருந்து சலுகை அளிப்பதன் காரணமாக ஆலய நிலங்களுக்குரிய குத்தகைத் தொகை குறைய வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே கோவில்களில் வருமானம் மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. எனவே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட கோவில் மற்றும் மானிய நிலங்களுக்குக் குத்தகைச் சட்டத்தின் சரத்துகளிலிருந்து விலக்களிக்கத் தேவையில்லை என கருதப்படுகின்றது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அவர்களுக்கு விலக்களிக்கத் தேவையில்லை என்பதாகக் காட்டியிருக்கிறீர்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய நிலை பற்றி நேற்று கூட இந்தச் சட்டமன்றத்தில் அவர்களுடைய வாழ்க்கை நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம், நாம் விவாதித்தோம். அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி எல்லாம் விவாதித்தோம். இந்த நிலையைப் பற்றி விளக்கமாகச் சட்டமன்றத்தில் பேச வேண்டும் என்று எனக்குச் சொன்ன தியாகி எங்கள் ஊரைச் சேர்ந்த திரு. மாதா கவுடர், அவர் கூட இப்போது உயிரோடு இல்லை. காலமாகிவிட்டார். அவர் போன்ற சில குடும்பத்தினர் படக்கூடிய இன்னல்களைக் களைய வேண்டும். தமிழக அரசு,

1987 ஏப்ரல் 23] [திரு. கே. உச்சி]

புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அதை நிச்சயமாகக்களையும் என்ற நம்பிக்கையில்தான் இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசீலனை செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று சுதந்திரப் போராட்டக் காலத்தில் பாடுபட்ட வீரர்களுக்காக எந்த அளவுக்கு அனுதாபம் காட்டி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமோ அதை மத்திய அரசு செய்யும். மாநில அரசு இதில் உரிய கவனம் செலுத்தி வசதி வாய்ப்புக்களைச் செய்து வருகிறது. ஆகவே அந்த வகையிலே அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்கு வதிலே மத்திய அரசும் கவனம் செலுத்தி வருகிறது. மாநில அரசும் கவனம் செலுத்தி வருகிறது. 6 மாதம் சிறையில் இருந்தவர்களுக்கு சலுகை என்பது மாறி 3 மாதம் சிறையி யிருந்தவர்களுக்கு என்பது மாறி, 1 மாதம் சிறையிலிருந்தவர் களுக்கு என்பதும் மாறி அதற்கு உட்பட்டு இருந்தாலும் கூட, சிறையில் இருந்து கணக்கே வராவிட்டாலும் கூட, சிறையில் கூட இருந்த பெரியவர்கள் சொன்னால் போதும் என்ற அளவுக்கு வந்து, பெரியவர் பக்தவத்சலம் போன்றவர்கள் எல்லாம் கையெழுத்துப் போட்டாலும் போதும் என்ற நிலைக்கு வந்து, அவர்களுக்கு அந்த வசதிகள் எல்லாம் செய்ய வேண்டும் என்று மானியம் அளித்து வருகிறது.

அது மட்டும் அல்லாது ஏற்கெனவே எடுத்த முடிவுக்கு இணங்க, நஞ்சை, புஞ்சை நிலம் எல்லாம் கூட அவர்களுக்கு அளித்திருக் கிறோம். ஆனால் குத்தகை சட்டத்திலே இருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்வதன் மூலமாக கோவில்களுக்கு வருகின்ற வருமானம் குறைந்துவிடும். ஆகவே எல்லோருக்கும் இருக்கிற விதிகளைத்தான் அவர்கள் கடை பிடிக்க வேண்டுமே தவிர அவர்களுக்கு மட்டும் நாம் சலுகை அளித்து விடுவோமேயானால் முன்னாள் இராணுவ வீரர்களும் கூட வருவார்கள். மற்றவர்களும் வருவார்கள். கோவில் களுக்கு இருக்கிற வருமானம் ஏற்கெனவே குறைந்து வருகிறது. அதனுடைய முழு வருமானம் இல்லாத காரணத்தினால் கோவில் களில் 6 கால பூசை நடத்த முடியவில்லை. அங்குள்ள பணி யாளர்களுக்கு சம்பளம் தர முடியாத நிலை இருக்கும்போது, வருகின்ற குத்தகையும் வராத நிலைமை ஏற்பட்டுவிடுமே யானால் இன்னும் பாதகம் ஏற்படும். ஆகவே தான் அவர்களுக்கு வேறு பல சலுகைகளை அளித்து வருகிறோம். இந்தச் சட்டத் திலே நாம் சலுகைத்தர ஆரம்பிப்போமேயானால் அதன் காரண மாக மற்றவர்களும் வருகிற சூழ்நிலை ஏற்படுமானால் அதனால் பாதிக்கப்படுவது பொது நிறுவனங்களும், கோவில்களுமேயாகும் என்ற காரணத்தினாலேதான் இதிலே விதிவிலக்கு அளிப்பதற்கு முடியாது என்று அரசு திட்டவட்டமாகக் கருதுகிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களில் மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு ஏதாவது சலுகைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி அவர்களுக்கு வேறு பல சலுகைகள், அவர்களுடைய நிலைமைத் தன்மை, குடும்பத் தன்மை இவைகளையெல்லாம் பார்த்து நாம் அளித்து வருகிறோம். அவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் சொல்வதற்கு இப்போது நேரம் இல்லை. ஆனால் குத்தகைச் சட்டத்திலேயிருந்து தனிச் சலுகை பெறவேண்டும் என்று சொல்லப்படுமானால் அதன் காரணமாக அந்தச் சட்டத்தினுடைய நோக்கம் கெடும். அதன் காரணமாகத்தான் அதிலே தருவதற்கு இல்லை என்று சொன்னேன். வேறு பல வகைகளிலே அவர்கள் கேட்பார்களேயானால் அதைத் தனியாக அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் சார்பாக திரு. மா. மணிமாறன் அவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

(இ) கடன் பைசல் சான்றிதழ்கள் வழங்கப்படாமை

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழக அரசு அறிவித்துள்ள ரூ. 125 கோடிக்கான வட்டி தள்ளுபடி தொகை அரசின் நிலவள வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைந்த விவசாய சேவை சங்கங்களுக்கு இதுவரையில் மாநில அரசினால் அளிக்கப்படாதது குறித்தும், கடனைச் செலுத்திய விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கக்கூடாது என சுற்றறிக்கை அனுப்பி இருப்பதும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

அரசாணை (நிலை) எண். 660, கூட்டுறவுத் துறை, நாள் : 27—9—1986-ல், 31—3—1986-ல் நிலுவையிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட வகைக் கடன்களுக்கு வட்டி தள்ளுபடி சலுகைகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது :—

(1) குறுகிய கால பயிர்க்கடன் நிலுவை.

(2) தவணை தவறிய மத்திய கால கடன் நிலுவை.